சைவ பரிபாலனசபை வெளியீடு:
ஆரம்பம் 1889 விரோதி ஸு ஆவணி மீ 26-ம் நாள்

இலங்கையிற் செய்தித்தாளாகப் பதிவு பெற்றது
பிரதி விலை: ரூபா 5-00. பதிவு இலக்கம்—2

# இந்து சாதனம்

சிவமயம்

புத்தகம் — 105 யாழ்ப்பாணம் ஆங்கீரச ஆண்டு மார்கழித் திங்கள் 26-ஆம் நாள் ( 10-01-93 ) இதழ் - 1

# மகா சிவராத்திரி வழிபாடு

19-2-92 வெள்ளி

"மால் அயனும் மாறிவந்து
ஆலவாயான் அடிபணிந்த
நாளிதுவே நோன்பு செய்வோம்
வேள் இரவு விழித்திருப்போம."

சிவராத்திரி என்றால் சிவனுக்குரிய இரவு எனப் பொருள் படும். சிவராத்திரி சிவபெருமானை நோக்கி விரதம் இருந்து இரவு முழுவதும் தியானம் செய்து விழித்து இருக்கும் இரவாகும் சிவராத்திரி ஐந்து வகைப்படும். நித்திய சிவ ராத்திரி யோக சிவராத்திரி, பட்சமாத சிவராத்திரி மகா சிவராத்திரி ஆகும். பெரும்பாலும் மக்கள் விசேடமாக அனுட்டிப்பது மகாசிவராத்திரியாகும். இவ்விரதம் மாசி மாதத்து அமரபட்ச சதுர்த்தசி திதியிலே சிவபெருமானைக் குறித்து அனுட்டிக்கப்படும்.

இவ் விரதத்தை அனுட்டிப்போர் திரயோதசி தினத்தில் ஒரு நேர உணவு அருந்தி மறு நாள் சதுர்த்தசியில் உபவாசம் இருந்து நித்திரை விழித்து நான்கு யாமங்களிலும் சிவபெருமானை வழிபட்டு அடுத்த நாள் பாரணம் செய்ய வேண்டும்.

சிவராத்திரியில் சிறந்த நேரம் இலிங்கோத்பவகாலம்: இலிங்கோத்பவகாலம் என்பது இரவு 11-30 — 12-15 வரை உள்ள காலம் ஆகும்; இரவு முழுவதும் விழித்து இருத்தல் நன்று: இவ் விரதம். 24 வருடங்கள் அல்லது 12 வருடங்கள் அல்லது 6 வருடங்கள் தொடர்ந்து அனுட்டித்த பின் முறைப்படி விரதம் பூர்த்திசெய்தல் நன்று.

இவ் விரதத்தைக் குறித்து ஒரு புராண வரலாற்று கதையுண்டு. அதாவது படைத்தல் கடவுளாகிய பிரமனும், காத்தல் கடவுளாகிய விஷ்ணுவும் தாமே பிரமம் என்று ஒருவருக்கு ஒருவர் வாதாடியபோது சிவபெருமான் சோதி பிழம்பாக தோன்றி இதன் அடியையும் முடியையும் யார் தேடிக் காண்கின்றாரோ அவர்களே உலகில் முதல் பிரமம் ஆகும் என்ற 'அசரீரி' வாக்கு கேட்டது. இதனைக் கேட்ட மகாவிஷ்ணு பன்றி வடிவம் எடுத்து அடியையும் பிரம்மா அன்னம் வடிவம் எடுத்து முடியையும் தேடினர். அடியையும் முடியையும் இருவரும் கண்டிலர். இதிலிருந்து செல்வத்துக்கு தலைவியாக வீற்றிருக்கும் மகாலக்சுமியை தனது பாகத்தை கொண்ட செல்வச் செருக்கினாலோ, சரஸ்வதியை தனது பாகத்தை கொண்ட கல்வி செருக்கினாலோ, அடியையும் முடியையும் காண முடியாது என்பது வெளிப்படை. ஆகவே அருளோடு கூடிய செல்வத்தினாலும் அருளோடு கூடிய கல்வியினாலுமே இறைவனை காணலாம் என்பது வெளிப்படை ஆகும், இக் காலங்களில் திருமறைப் பாராயணத்தோடு சிவராத்திரி புராணம், கந்தபுராணம் அடிமுடிதேடிய படலம் என்பதையும் படிக்கலாம்.

# உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் ஓலக்குரல்

## 10-1-93 இன்று! ஈனச் செயலின் இருபதாம் ஆண்டு ஆரம்பம்

நான்காவது உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டின் (1974) பேரெழுச்சி கரைபுரண்டோடிய வேளை இனத் துவேஷம் தலைதூக்கி ஆயுதப் படையினரால் காடைத்தனம் கட்டவிழ்த்துவிடப்பட்டு ஒன்பது உயிர்கள் பரிதாபமாகச் சிதைக்கப்பெற்ற துயரம்செறிந்த நாளின் 20 ஆம் ஆண்டு இன்று ( 10-01- 1993 ஆரம்பமாகின்றது.

உலகாளும் தமிழ் மறவர் - தமிழ் உரிமை கேட்கும் வீரத் தியாகிகள் தமிழ்உரிமை முழுமையாகப் பெறும்வரை தாங்காமற் செயற்படுவோம என உறுதி எடுக்கும் நாள் இந் நாளாகும். இத் தினத்திலே நாம் செயற்படும் எல்லா நடவடிக்கையிலும் வெற்றிபெற சிவபெருமான் அருள் வேண்டிப் பிரார்த்திப்போமாக.

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்கு
ஆழ்க தீயதெல் லாமரனுமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

ஆங்கீரச ஸூ மார்கழிமீ 26 (10-01-93)


## ஆலயங்களை அழிப்பதனாலாய பயனென்ன?

"யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வமா
மாதொரு பாகனுர் தாம் வருவார்"

### அறநெறிக்காதாரம் அன்புமய இறைவழிபாடு

அழிக்கும் தொழில் மனிதவழிக்காகாது. பழிக்குமேற் பழியை வளர்த்திடும் பாதகம் இதனை யாதொரு ஏதுக் காயினும் செய்ய எந்த ஒரு மதமும் சம்மதம் அளிக்காதே.

வெவ்வேறு வண்ணமாக வேதமுதல்வனே விண்ணிலும் மண்ணிலும் வெளிப்படுகின்றான்.

பலவகைச் சின்னங்கள் நிலவுலகிலுள்ளன. அவை அருகருகாக இருக்கலாமே. ஒன்றை ஒன்று கொன்று தின்னுமை அறம் என்றல்லவோ நன்றுரைப்பர் ஞானிகள்.

அக்கினி அரனுக்குரியது. மிக்க தூய்மையானது பக்குவமான இக்காரியத்தை கைக்கொள்ளுபவர் அந்தணர்கள் தியவை செய்யத் தீயெடுப்பது தான் தீவிரவாதம.

வாழ வழிகாண்போம், நீள நினைப்போம் நிமலனை.
அன்பு நெறி அதுவே இன்பமுறை.

---

## 06 - 02 - 1993 சனிக்கிழமை
## தைப்பூசத் திருநாள்

"தைப்பூசங் காணுதே போதியோ பூம்பாவாய்"
(திருஞானசம்பந்தர்.)

தைப்பூசம் என்பது தை மாதத்துப் பூசத் திருநாள் எனப்படும். தை பூச நன்னாள் சிவசக்தி ஐக்கியத்தையும் மேம்பாட்டையும் விளக்கும் புனிதமான ஒரு பெருநாள் ஆகும். சிவத்தின் அம்சமான சூரிய பகவான் மகர ராசியில் இருக்க சிவசத்தி அம்சமான சந்திரன் கடகராசியில் ஆட்சி பெற்று இருக்க சூரிய சந்திரர்கள் இருபுறமும் நேர் கோட்டில் இருக்க தைப் பூசத்துடன் இணைந்த பூரணையில் நிகழும்.

பதஞ்சலி, வியாக்கிரதபாதர் முனிவர் முதலானோர் தரிசிக்க சிவபிரான் ஆனந்த தாண்டவம் ஆடியதும் தைப் பூச நாளில் தான் தை மாதத்தில் பூரணை சேரும் பூசை நாள் மிகவும் விசேடமானது ஆகும். இந்நாளில் புதிர் எடுத்தல், பெண் பிள்ளைகளுக்கு மூக்குக் குத்துதல், வித்தியாரம்பம் செய்தல, ஆகிய நற்கருமங்கள் நடைபெறும் நாள் ஆகும். சிவசக்தி ஐக்கியமாக விளங்கும் முருகப் பெருமானுடைய பெருமை பெறும் தினமாகவும் இது அமைகின்றது. அதனல் முருகன் ஆலயங்களில் விசேட அபிசேகம், மஞ்சதிருவிழா, அன்னதானம் என்பன விசேடமாக நடைபெறும்.

இப்பூசை நாளின் சிறப்பினை திருஞானசம்பந்த மூர்த்தி நாயனுர் தாம் பாடியருளிய தேவாரத்தில் பின்வருமாறு எடுத்து கூறுகின்றார்.

திருச்சிற்றம்பலம்
"மைப்பூசு மொண்கண் மட நல்லார் மாமயிலைக்
கைப்பூசு நீற்றன் கபாலீச்சர மமர்ந்தான்
நெய்ப்பூசு மொண்புழுக்கல் நேரிழையார் கொண்டாடும்
தைப்பூசங் காணுதே போதியோ பூம்பாவாய்"
திருச்சிற்றம்பலம்

---

## சோதித்துத் தாக்கிய வினைத்துன்பம் துடைக்க
## ஆதித்தனை வடக்கிற் கருணைக்
## கதிர்வீச அர்ச்சிப்பாம்

ஊக்கம் உவக்கும் உத்தராயணம் ஈழத் தமிழ் இனத்துக்கு ஆக்கம் தரும் அரிய தருணமிதில் இனிக்கின்னமுதாய மகர சங்கிராந்தித் தைத் திங்கட் பொங்கற் பூசை வைத்து வாழ்த்தி வணங்குவோம்.

ஏராளர்களே! நீவிர் சோராதீர்; ஆராதனை செய்யின், நீராய்ப் பொழியும் கருணை நெற் பயிர் முற்றி பசிப்பிணி போக்க மணி உற்பத்தியாகும்.

வானினும் சிறந்த ஆனினம்தான் தமிழினத்துக்கான துணை. இடபாடுடன் பசுபதி

பால் சுரக்கப் பொங்கல் சால வைப்போம் மாட்டுப் பண்ணையில்.

மங்களமாக மங்கையர் சொற்றிறம்பாது ஐங்கரனை அர்ச்சித்துப் பொங்கலைப் பொலிய வைத்து மஞ்சள் வாழ்க்கை நீடெய்தப் போற்று வார்களாக.

போனது போகட்டும் நன்மை ஆனதிங்காகட்டும்
வானது போதன — வன்னம் தானது வேகட்டும்
தானமு ஞானமும் — கோயிலிற் — கானமும் யாகமும்
போலகமாவமு — தாந்தைப் பொங்கலும் வேகட்டும்.

# தைப் பொங்கல்

பொங்கல் திருநாள் என்றாலே உலகிலுள்ள மக்களுக்கு தமிழர்களே நினைவுக்கு வருவர் தமிழர்களென்றால் தமிழ் கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு முதலாய் ஆதியிலிருந்து, தமிழினைப் பேசியும் எழுதியும் வந்த திராவிட மக்கள் அனைவரையும் குறிக்கும். உலகெல்லாம் பரந்து பட்டு வாழ்கின்ற தமிழர்கள் பொங்கல் விழாவைக் கொண்டாடுவர். இதனாலன்றோ பொங்கல் திருநாள் தமிழர் திருநாள் என்று வழங்கப்படுகின்றது. உழைப்பின் மகிமையை உணர்ந்தவர்கள் தமிழர்கள் என்பதனை இத் திருநாள் புலப்படுத்துகின்றது. தத்துவரீதியாக பொங்கல் என்பது அனைவரினதும் உள்ளத்திலும் அன்பும் இன்பமும் பொங்கி ஆக்கமும் ஊக்கமும் பொங்கி முயற்சியுடையவர்களாக மிளிர வேண்டும் என்றும் உணரச் செய்கின்றது. நாம் எதிர் காலத்தில் சுதந்திரமாக வாழ வேண்டும் என்றும் திடசங்கற்பம் செய்து கொள்ள வேண்டிய நாளாகவும் இது அமைகின்றது. இத்திருநாள் தமிழ் நாட்டிலும் ஈழ நாட்டிலும் கொண்டாடப்பட்டு வருகின்றது.

உழவர்கள் திருநாள் என்றும் இதனைக் குறிப்பிடுவர் ஆடி மாதம் முதல் மார்கழி மாதம் வரை பயிர்கள் பயிரிடப்படுகின்ற காலமாகும். இக்காலத்தில் உழவர்கள் கடுமையாக உழைப்பார்கள் கடுங் காற்றிலும், அடைமழையிலும், கடுமையான குளிரிலும், அல்லும் பகலும் அயராது உழைத்த உழவர்களின் இன்ப நாளே தைத்திருநாள். உழவர்கள் பட்ட துன்பமெல்லாம் நீங்கும் நன்னாள் ஆகும் தை மாதம் முதல் நாள் அன்று விநாயகப்பெருமானை வணங்கி நாம் அனைவரும் சூரியனுக்குப் பொங்கிப் படைத்து வழிபடும் கொண்டாட்டம் பொங்கல் பண்டிகையாகும். இதனை சூரிய பொங்கல் என்றும் வழங்குவர் சூரிய வணக்கம் இன்று நேற்று ஏற்பட்டதன்று எம் முன்னோர்களால் கி. மு. 2800. ஆண்டுகளுக்கு முன் பின்பற்றப்பட்டுவந்த ஒரு வழிபாடாகும் ஆகமங்கள் சூரிய பூசை பற்றிக் குறிப்பிடுகின்றது. எமது ஆலய வழிபாட்டிலும் சூரிய வழிபாடு இடம் பெறுகின்றது. இருக்கு வேதம் சூரியனைத் தெய்வமாகக் குறிப்பிடுகின்றது. 'சௌரம்' என்று சூரியனைக் கடவுளாகக் கொண்ட சமயம் வழங்கிவந்திருக்கின்றது. இத்தகைய சூரியனே உணவு உற்பத்திக்கும் உயிர்களின் வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருப்பவன். அவன் செய்யும் நன்மைகள் நாம் மறக்கலாமா? நன்றி மறப்பது நன்றன்று என்ற ஒரு தமிழ்ப் பண்பாட்டுக்கு இணங்க புதுப் பயிர் அறுவடை செய்து பெற்ற செந்நெல் பச்சை அரிசியும் கரும்பின் சர்க்கரையும் பசும் பாலும் சேர்த்துப் பொங்கி சூரியன் உதயமாகும் போது படைத்து நன்றி செலுத்தும் நாளும் இந்நாளே. சூரியனுக்கு நன்றி செலுத்தும் மக்கள் உழவர்களுக்கும் உழவுத் தொழிலுக்கு உறுதுணையான பசுக்களுக்கும் எருதுகளுக்கும் நன்றி செலுத்த மறப்பதில்லை. இதனால் தான் மறுநாள் மாட்டுப் பொங்கல் அல்லது பட்டிப் பொங்கலை நடாத்தி அவற்றுக்குக் கொடுத்து தாமும் மகிழ்வர்.

பொங்கல் தினத்தன்று யாவரும் அதிகாலை 4 மணிக்கே துயிலெழுந்து தம்மையும் தம் வீடு வாசல்களையும் சுத்தம் செய்து அலங்கரித்து முற்றத்திலே அழகிய கோலமிட்டு மத்தியிலே நிறைகுடமும் குத்துவிளக்கும் வைத்து புதுப் பானையில் பொங்கல் பொங்கி மகிழ்வர். புதுப் பானையிலே பால் பொங்கி வர உள்ளத்திலும் உவகை பொங்க கோயில்களிலும் ஊரிலும், நாட்டிலும் இன்பம் பொங்க நாம் கொண்டாடும் பொங்கல் விழா ஒரு நாள் விழாவன்று இது ஒரு தொடர் விழா வென்றே கூற வேண்டும் மார்கழி மாத இறுதி நாள் வீட்டில் உள்ள புற அழுக்கையும் மனதிலுள்ள அக அழுக்கையும் போக்கும் ஒரு தூய்மை விழா என்றும் இதனைக் குறிப்பிடலாம், தை முதல் நாள், பொங்கல் விழா இதுவே உழவர் விழா அடுத்த நாள். மாட்டுப்பொங்கல் இது நன்றி உணர்வை காட்டும் நன்றிவிழா. குறிப்பாக பசுவை இந்துக்கள் தெய்வமாக போற்றிவந்தார்கள். இதற்கு அறிகுறியாகத்தான் சூரிய பொங்கலுக்கு அடுத்த நாள் பகல் மாட்டுப் பொங்கல் விழா எங்கள் மக்களால் கொண்டாடப்பட்டு முதலில் பசுக்களுக்கு நைவேத்தியம் செய்து, தாமும் உண்டு மகிழ்வர். உலகம் உய்யவும் எமது பொருளாதாரம் பெருக்கவும், சமூக உரிமைகள் எல்லாம் வந்துசேரவும் அவற்றை நாம் வென்றெடுக்கவும் இனி வருகின்ற பொங்கல் எங்களுக்கு வழிகாட்டியாக அமையும் என பிரார்த்திக்கும் இந்நாளே எங்கள் பொங்கல் நாளாகும், இதனைத் தொடர்ந்து ஊர்களில் நடைபெறும்கேளிக்கைகளும் வண்டிச் சவாரி காளை அடக்குதல் போன்ற வீரதீரச் செயல்களுக்கும் உரிய விழா பொங்கல் விழா. இன்றைய காலகட்டத்தில் தேவையும் அத்தியாவசியமுடைய விழாவாகவும் அமைகின்றது. தேவர்களுக்கு இரவு நீங்கி பகற்பொழுது ஆரம்பிக்கும் இவ்வேளை உத்தராயணம் எனப்படும். தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். தைமாதம் பயிர் விளைவுகளின் பெரும் பயன்களைப் பெறும் மாதம். உழவர் மகிழ்ச்சி பொங்கும் மாதம். மலர்ச்சி பொங்கும் மாதம். கடும் உழைப்பிலிருந்து விடுதலை பெறும் மக்களது அபிலாசைகளின் வெற்றி விழாவே தை பொங்கல். இது ஓர் சமுதாய சமய விழாவென்றே கூறலாம். இதில் அனைவரும் முற்றாக பங்குபற்றி எல்லா சுபீட்சத்தையும் ஒற்றுமையுடனும் ஒருமைப்பாட்டுடன் பெற்றுய்வோமாக.

சு. பா. காசிநாதன். B. A.
ஆசிரியர் புனித பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாணம்.

---

## புவியாளப் பொங்கிடுவோம்!

இமயத்தின் உருத்திரனை பாற்கடலின் பெருமானை
சமயத்தின் பிரம்மாவை மகேஸ்வரனை சதாசிவனை
சூரியனின் செழுஞ்சுடரில் சேர்ந்திறைஞ்சிப் பொங்கிடுவோம்
பூரித்தெம் கொடிபறந்து புவியாளப் பொங்கிடுவோம். (1)

அண்டங்கள் அதிர்ந்தாலும் ஆள்புலன்கள் அழிந்தாலும்
கண்டங்கள் கரைந்தாலும் காலங்கள் கவிழ்ந்தாலும்
ஈழத்தில் அருள் ஈந்து ஞாலத்தையும் இணைத்து
வேழத்து வன் தமிழர் வையமெலாம் வெற்றிபெற: (2)

சீலத்தில் பொங்கிடுவோம் சிவன் அருளில் பொங்கிடுவோம்
நீலத்தில் வான்பரவும் விமலாய் பொங்கிடுவோம்
காலத்தைப் படைப்பவனின் கருணையில் பொங்கிடுவோம்
மால அயனும் அரன்மூவர் மாண்பினிலே பொங்கிடுவோம்(3)

விந்தைபுரி வாய்மையுடன் வாய்மைதரு வன்மையுடன்
சந்திரனின் செழுமையுடன் சூரியனின் செம்மையுடன்
இந்தனையின் சீர்மை அருள் சுடரான வெற்றியுடன்
நித்தமெல்லா நாள்தோறும் நின்றென்றும் பொங்கிடுவோம்(4)

விக்கினம் தீர் விநாயகனே வெற்றிபெற வேலவனே
பக்குவமாய் தமிழ்தந்த பார்புரக்கும் வரம்தருவீர்
தக்கவரம் வைரவரும் பத்திரரும் தந்திடுவீர்
மிக்கபரம் பொருள் மூவர் தேவியரும் மகிழ்ந்தருள்வீர்: (5)

— "நல்லூரான் வெற்றிவேலன்"

### சைவபரிபாலன சபை - யாழ்ப்பாணம்

# இலங்கை சைவசமய பாடப் பரீட்சை

# வினாவும் விடையும் - 1993

### ஆண்டு 11

1. மூவகைக் குணங்கள் எவை?
தாமதம், இராசதம், சத்துவம்

2. நடராஜப் பெருமானின் ஊன்றிய திருவடி எதனைக் குறிக்கின்றது?
மறைக்கும் தொழிலைக் குறிக்கிறது.

3. சிவனுக்கு உரிய நட்சத்திரம் யாது?
திருவாதிரை.

4. இலிங்கோற்பவ காலம் என்றால் என்ன?
மகாசிவராத்திரி அன்று நள்ளிரவு வேளையில் சிவபெருமான் இலிங்கத்தில் தோன்றிய காலம் ஆகும்.

5. உயிர்களைக் காக்க நஞ்சை உண்ட இறைவனின் செயலை எப்பெயரால் அழைப்பார்?
தியாகேசர்,

6. விநாயகப் பெருமான் வலக்கரத்தில் தாங்கி உள்ளது யாது? அங்குசம்.

7. இருக்கு வேதத்தில் எத்தனை பாடல்கள் உண்டு?
(1028) ஆயிரத்து இருபத்து எட்டு.

8. வேதம் என்ற சொல்லின் பொருள் யாது?
மிகச்சிறந்த அறிவு எனப் பொருள்படும்.

9. சிவன் என்ற பெயர் தரும் பொருள் யாது?
மங்களம் தருபவர் என்பதாகும்.

10. குறிஞ்சி நிலக் கடவுளின் பெயர் யாது?
முருகப் பெருமான்.

11. பிரசன்ன வதனம் இதன் பொருள் யாது?
மகிழ்ச்சியைத் தரும் யானை முகம்

11 கிராம சாந்தி என்றால் என்ன?
உற்சவ ஆரம்பத்திலே ஊர் நன்மை பெறுதவதற்காக வைரவருக்கு பூசை செய்தல்.

12. ''உன்னடியார் தாழ்பணிவோம்'' என்றுகூறியவர் யார்?
மாணிக்க வாசகர்.

13. குரு என்ற சொல்லின் பொருள் யாது?
அறியாமையை போக்குவது என்பது பொருள்.

14. ஞான பூசையாவது யாது?
ஞான நூல்கள் ஆகிய சைவசித்தாந்த சாஸ்திரங்களை விதிப்படி ஓதுதல், விதிப்படி ஓதுவித்தல், அவைகளின் பொருளைக் கேட்டல், கேட்பித்தல், சிந்தித்தல் ஆகிய ஐந்துமாம்.

15. ஆகமம் சத்திநிபாதத்துக்கு உரிய நூல் என்று கூறும் நூல் யாது? - சிவஞான சித்தியார்

16. முத்தி இன்பம் பெறுவதற்கு முக்கிய சாதனமாக உள்ளது யாது? - ஆலய வழிபாடு ஆகும்.

17. காஞ்சி கைலாசநாதர் கோயிலைக் கட்டுவித்தவன் யார்? - இராஜ சிம்மன்

18. வைணவ ஆகமங்கள் எப்பெயரால் குறிக்கப்படுகிறது? - பாஞ்சராத்திரம்

19. கந்தர் அலங்காரத்தின் ஆசிரியர் யார்?
அருணகிரிநாதர்

20. முருகப்பெருமானின் மூன்று சக்திகளையும் குறிப்பிடுக
இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞான சக்தி.

21. சைவ சித்தாந்தக் கொள்கைகளைத் தெளிவாகக் கூறுகின்ற முதல் தமிழ் நூல்? - திருமந்திரம்.

22. நாம் வாழுகின்ற இக்காலம் யாது? - கலியுகம்.

23. பெரிய புராணம் எனும் நூலின் காவிய நாயகன் யார்?
சுந்தரமூர்த்தி நாயனார்.

24. ''உள்ளது இல்லதாகாது, இல்லது உள்ளதாகாது'' எனும் கொள்கை யாது? - சற்காரியவாதம்.

25. 'நான்' 'எனது' எனும் செருக்கை மனிதர்களிடத்தே உண்டாக்குவது? - ஆணவம்.

26. ''சிவபுரத்தரசே திருப்பெருந்துறையுறை சிவனே'' என்று பாடியவர் பெயர் என்ன? - மாணிக்கவாசகர்.

27. 'மண்ணினல்ல வண்ணம் வாழலாம்' என்று திருவாய் மலர்ந்தருளியவர் யார்? - திருஞானசம்பந்தர்.

28. தேன் பொந்து என்று நாவலர் பெருமானால் பூசிக்கப் பெற்ற புண்ணிய தலம் எது? - திருக்கேதீஸ்வரம்.

29. சகலாகம பண்டிதர் என்ற சிறப்புக்கு உரியவர் யார்?
அருணந்தி சிவாச்சாரியார்.

30. பசுக்கொலைக்கு அஞ்சிப் பிறதேசஞ் சென்றவர் பெயர் என்ன? - ஞானப்பிரகாச முனிவர்.

31. திருத்தொண்டத் தொகை எத்தனையாம் திருமுறையில் இடம்பெறுகிறது? - 7ம் திருமுறையில்

32. 'இருண்மலம்' என்பது எதைக் குறித்து நிற்கின்றது?
ஆணவம்.

33. பஞ்ச கௌவியம் என்றால் என்ன?
கோசலம், கோமயம், பால் தயிர், நெய்.

34. திருக்கோவையார் பாடி அருளியவர் யார்?
மாணிக்க வாசகர்.

35. சைவ நெறியில் ஆனந்த வடிவில் விளங்கும் கடவுளின் பெயர்? - நடராஜர்.

36. ஆலம் இலையில் உணவுபடைத்து வழிபடும்திருத்தலம்
செல்வச்சந்நிதி.

37. பிரதோஷ காலத்தில் வழிபட வேண்டிய கடவுள்?
இடபாரூடர்

38. கொடித்தம்பம் இல்லாத கோயில்களில் நடைபெறும் திருவிழா? - அலங்காரத்திருவிழா

39. பஞ்ச புராணத்தில் இறுதியாக இடம் பெறுவது?
பெரியபுராணம்.

40. பராபரக்கண்ணி பாடியருளியவர்? - (தாயுமானவர்)

---

### அணிக்கணி செய்து அலங்கரித்த பாவலன்

'கலைமாமணி' ந. வீரமணிஐயா

செந்தமிழின் மணியாரம் செழுந்தமிழில்
செவ்க்குவளை வண்மொளி பதக்கம் மின்னி
வந்தைமிகு கவித்தமிழ் மேகலையும் செய்தே
வியனுறு புலவன்நம சிவப்பிர காசம்
தந்தனனே அலங்காரம் தெல்லிநகர்
தாயான துர்க்கை அலங் காரம்செய்தே
முந்தும் அருள் புலவனுக்கேமுகிழ்த்தாள் அன்னை
முதறிஞன் சிவப்பிர காசம் வாழி

# சஷ்டி விரதம்

( வானொலிப் பேச்சு )

தெய்வத்தின் திருவருள் மக்கள் பல வழிகள் மூலம் பெற்றுக்கொள்கின்றனர் விரதங்கள் மேற் கொள்வதும் அவற்றுள் ஒன்றாகும் மனிதப் பிறவி எடுத்து ஒவ்வொருவரும் தத்தம் உடம்பையும் உடம்பிற்கு வேறாயிருந்து அவ்வுடம்பை இயக்கும் உயிரையும் பேணித் தூய்மை அடைய வேண்டியது முக்கியமாகும். விரதங்களை மேற் கொள்ளும் போது ஐம் பொறிகளையும் அடக்குகின்ற அனுபவம் உண்டாகின்றது ஐம்புல உணர்வுகளின் வேகம் கெடுக்கின்றது ஆன்மா உணர்வு தோன்றுகின்றது. ஆன்மா நாயகனை அண்டிச் செல்ல ஆர்வம் பிறக்கிறது.

இன்றைய நாகரீக உலகின் சிலர் உண்டு. உறங்கியதால் தசைப் பிண்டங்களை வளர்த்து அளவிற்கு மீறிய போசனைச் சத்துக்களால் வியாதி அடைந்து வைத்தியர்களின் ஆலோசனைப்படி சில நாட்கள் உணவுக் குறைப்பும் செய்து கொள்கிறார்கள். தேகாப்பியாசம் போன்ற பயிற்சிகளால் நிறைக் குறைப்பு செய்து கொள்கிறார்கள். இது விரதம் ஆகாது இவர்கள் உடல் மினுக்கிகள் அல்லது மேனி மினுக்கிகள் என அழைக்கப்படுவர் உண்மையான விரதம் இருப்பவர்கள் உடம்பை வாடடிப் பசித்திருந்து தனித்திருந்துவிழித்திருந்து அவ்வவ் விரதங்களுக்குரிய. தெய்வ வடிவங்களை வழிபட வேண்டும் இதனால் அவர்களுடைய ஊன் உருகி உள்ளொளி பெருகும்.

முருகன் திருவருளைப் பெறுவதற்கு வெள்ளிக்கிழமை விரதம் கார்த்திகை விரதம் சஷ்டி விரதம் ஆகியவற்றைக் மேற் கொள்ளுதல் வேண்டும் இவற்றுள் சஷ்டி விரதத்தை அனுட்டித்தல் சாலச் சிறந்தது. இது ஒப்பற்ற விரதம் ஐப்பசி மாதம் சுக்கில பட்சம் ஆறாம் திகதியில்தான் சூரபன்மன் மாண்டு விண்ணவர் தம் நிலையினைப் பெறறான். இந்நாள் சஷ்டி விரத இறுதி நாளாகும். இதற்கு முக்கிய ஐந்து நாட்களும் கந்த வேளை நினைத்து விரதம் அனுட்டிக்கப்படும். இதனால் இதற்கு கந்த சஷ்டி விரதம் என்று பெயர். சூரபன்மன் 1008. அண்டங்களையும் 108 யுகங்களாக அரசு புரிந்து மால் அயன் முதலான வானவர்களை வருத்தினான் துன்பத்தால் துடித்த வானவர்கள் ஈசன் பால் தஞ்சம் புகுந்தார்கள். ஐந்து முகச்சிவம் ஆறுமுகச் சிவமாக சூரபன்மனை ஞான வேலால் பிளந்தருளினார் ஒரு பாதி மயிலாகவும் மறு பாதி சேவலாகவும் வந்தான சூரபன்மன் இப்படிவந்த பறவைகள் மீது பரம கருணை பொழிந்து மயிலை வாகனமாகவும் சேவலை கொடியாகவும் குமரவேல் கொண்டருளினார் இது புராதன வரலாறு.

இங்கு நம் இன்னுமொரு உட் பொருளையும் காணுதல் வேண்டும். சூரபன்மன் ஆணவ மலம் ஆணவபலம் என்றும்நித்தியமாகவுள்ள பொருள் அது ஆன்மாவை ஆமை நாயகனிடமிருந்து மறைத்து ஆன்ம வலியைக் குன்றச் செய்கின்றது இதனைத் தகர்த்து எறிவதற்கு. ஞானமாகிய வேல் தேவை முருகனுடைய வேலாக வந்து ஆணவமலமாகிய சூரபன்மனுடைய வலியைக் குன்றச் செய்து அவனையே மயிலாகவும் சேவலாகவும் மாற்றி ஒரு புறம் மயிலும் மறுபுறம் சேவலும் நிற்க நடுவில் நடு நாயகமாக நின்று ஞான வேல் அருள் புரிந்து சூரபன்மனுக்கு ஆன்ம ஈடேற்றக் கொடுக்கின்றது: அப்பொழுது தான் சூரன் கோலமாக மஞ்சை மீது குலவிய குமரன் பாலன் அல்ல. அவன் மாலயன் தனக்கும் ஏனைய வானவர் தமக்கும் மூல காரணமாய் நின்ற மூர்த்தி என்று உணருகிறான்:

எனவே 'தீபவை புரிந்தரேனும் குமரவேல் திருமுன் உற்றால்' தூயவர் ஆகி மேலைத் தொல் கதி அடைவர் என்று மனதில் இருத்தி அவன் அருளாலே அவன் தாள் வணங்கிக் கந்தசஷ்டி விரதம் அனுட்டிப் போமாதக.

தா. சண்முகநாதபிள்ளை B. A.
( அதிபர் )
யாழ். மத்திய கல்லூரி.

---

# முன்னாள் மூதறிஞர்கள் வரிசையில்

அந்நாளில் ஆறுமுகநாவலர் அவர்கள் அறிவுச்சுடர் ஏற்றி அவ்ஒளி அணையாது தமிழகத்தில் விளங்க வைத்த கல்விமான்கள் ஒவ்வொருவரும் சைவநெறி நிலைநாட்டிய பெருந்தொண்டர் ஆவர்.

காசிவாசி செந்திநாத ஐயா சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரம்பிள்ளை சபாபதி நாவலர் உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளை என்று சிறப்பு வாய்ந்தவர்கள் - வள்ளல் பொன் இராமநாதன் முதலிய பரோபகாரிகள் - சைவ பரிபாலன சபையை நிறுவி நாவலர் பணியை தொடரத் தொண்டாற்றியவர்க - இவர்கள் எல்லோரும் இன்றிந்த இன்றிந்த ஈழத் தமிழ் நாட்டில் இருப்பவர்களுக்கு மூதறிஞர்களாகவே கண்முன் தோன்றுவர்.

இந்த நெடுங் கொடியில் இந்துமதத்தின் (Essentials of Hinduism என்ற நூல் எழுதிய சுகதாசர் சு. சபாரத்தின முதலியார் அவர்கள் குறிப்பிடத்தக்கவர். அவர்கள் சிவபதமடைந்த நாள் ஆங்கில ஆண்டு 192; பதினொராம் மாதம் பதினைந்தாம் நாள்.

முதலியார் அவர்கள் சைவபரிபாலன சபை - யாழ்) இந்துக் கல்லூரி இயக்குநர் சபையில் திருவாக அங்கத்தவராக நெடுங்காலம் பெரும்பணி புரிந்தவர்கள்.

அரச சேவையில் அதிகார பதவி வீற்றிருக்கும் பொழுது மெய்கண்ட சாத்திரம் தமிழ் இலக்கணம் வடமொழி கற்று வசன நடையில் அழகாக நூல்கள் பல இயற்றினர். அவற்றுள் ஒன்று ஈச்சுர நிச்சயம்.

சென்னை சைவசித்தாந்த மகாசமாசத்தின் தலைவராகப் 1916) கௌரவிக்கப் பெற்றனர்.

சைவப் பெரியாரின் சங்காதரி மட்டுவில் ம. க. வேற்பிள்ளை அவர்களின் மனைவி - தந்தை தாயர். வேற்பிள்ளை அவர்களின் புத்திரன் சட்டத்தரணி மாணிக்கவாசகரின் புத்திரியை வாழ்க்கைத் துணையாகப் பெற்று சைவப் பெரியாரின் குடும்பத் தொடர்புற்றவர்.

'இந்துசாதனம்' முன்னாள் ஆசிரியராகப் பெரும் புகழ் படைத்த பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தபிள்ளை முதலியாரின் மாமனாரின் சிரேட்ட சகோதரன் என்பது இங்கே குறிப்பிடப் பொருத்தமாகின்றது - பண்டிதை அமிர்தாம்பிகை அவர்களின் தாய்வழித் தாத்தா முதலியார் அவர்கள் நினைவில் நிற்கும் முன்னாள் மூதறிஞர்களில் ஒருவர்.

-~~-

# தேசோமயானந்தம்

[ மாவிட்டபுரம்
மகாராஜஸ்ரீ து. சு. ஷண்முகநாதக்குருக்கள்]

தீபத்தில் தெய்வங்களை ஆவாஹனம் செய்து பூசை செய்வது நமது தேசத்தில் தொண்டு தொட்டு வழங்கி வருகிறது. எங்கெங்கு கும்பாபிஷேகங்கள் நடைபெறுகிறதோ அங்கெல்லாம் மூலஸ்தானத்திலே தீப பிரதிஷ்டை சுமங்கலிகளால் நடைபெறுவதை நாம் காணலாம் மாகாபாரதம் இராமாயணம் எனும் இதிஹாசங்களில் தீப, பூசைகள் ஏராளம் உண்டு.

"ஒளி" என்பது ஞானத்திற்கும் "இருள்" என்பது அஞ்ஞானத்திற்கும் அறிகுறியாகும். ஆகவே தான் "தமஸோமா ஜ்யோதிர் கமய" என வேதம் கூறுகிறது. தூர்க்கா லஷ்மி சரஸ்வதி ஸ்வரூபியான அம்பாளை தீபத்தில் ஆராதனை செய்வது மிகமிகச் சிறந்தது. ஸ்திரீகளை குடும்ப விளக்கு என வேதங்கள் நிச்சயிக்கிறது. அவர்களை கிருஹலஷ்மியெனவும் ஊர்ஜிதம் செய்கிறது வேதம். ரிஷி பத்தினிகள் அவ்வாறு வாழ்ந்துள்ளனர். ஆகவேதான் ஸ்திரீகள் தான் தீப பூசைக்கு உகந்தவர்களாகிறார்கள்.

பெரியபுராணத்தில் கலிய நாயனார் தீப பூசைகளால் முத்தி பெற்றுள்ளார். நரகாசுரன் வதம் செய்தபின் தாயாரான பூமிதேவி உலகெலாம் இந்நாளை தீப பூசைகளால் ஒளிவிட்டு பிரகாசிக்கச் செய்து எங்கும் தீப மயமாக இருக்க வேண்டுமென கண்ணபிரானை வேண்டினின்றாள். அதுவே தீபாவளியாயிற்று இறைவன் ஆதி அந்தமில்லாத ஜோதி மயமானவர். உலகில் காணும் ஒளிகள் அத்தனையும் இறைவனது திருவுருவமேயாதலால் 'ஜோதியே சுடரே' என மாணிக்கவாசகர் போற்றுகிறார்.

ஜோதி மயமான இறைவன் அண்டத்தில், மட்டுமின்றி உடம்புகளிலும் சுடர் விட்டுப் பிரகாசிக்கிறார் இதனையே 'தஸ்யமத்யேவஹ்னிசிகா அநியோர்த்வா என்றும், அதாவது கட்டைவிரல் பிரமாணத்தில் தீப ஜோதியாக பிரம்மம் இருதயத்தில் விளங்குகிறதென்றும் அது, நாப்யாமுபரிதிஷ்டதி நாபியிலிந்து ஓர்சாண் உயரத்தில் இருக்கிறதென நாராயண சூக்தம் தெளிவுபடுத்துகிறது.

வெளிச்சம் பற்றிய ஓர் சம்பாஷணை ஜனகருக்கும் யாக்ஞவல்கியருக்குமிடையே எழுந்தது:

வெளிச்சம் எங்கிருந்து வருகிறது? சூரியனிடமிருந்து!
சூரியன் இல்லாத இரவில்? சந்திரனிடமிருந்து;
சூரியனும் சந்திரனும் இல்லாத இடத்தில்? நெருப்பிலிருந்து!
சூரிய சந்திர, அக்னி இல்லாதபோது? வாக்கிலிருந்து; இருள் சூழ்ந்த அறையுள் ஆளைத் தெரியாவிட்டாலும் ஒருவரோடு ஒருவர் பேச்சால் ஒளி பிறப்பிக்கலாம் )
பேச்சுக்கும் இடமில்லை, அப்போது? ஆன்மாவின் ஒளிதான் வெளிச்சத்தைத் தரும். இந்த ஆன்ம ஒளிதான் உண்மை ஒளி இந்த ஒளிதான் சிவன், உமை, பிள்ளையார், ஸ்கந்தன், விஷ்ணு, சூரியன் என சம்பாஷணையின் முடிவு கண்டது:

"சுடரே சிவபெருமான் சூடு பராசக்தி
திடமார் கணநாதன் செம்மை படரொளியோ
கந்த வேளோடும் கருதுங்கால் சற்றேனும்
வந்ததோ பேத வழக்கு: என்றதோர் பாவுமுண்டு.

அம்பாளுக்கு "ஸ்வர்ண கௌரி" என்ற பெயர் கௌரி அஷ்டோத்தரத்தில் நூற்றி ஆறாவது (106) பெயராக சிறப்புப் பெறுகிறது. சகல சக்தி மூர்த்தங்களும் இதனுள் அடங்கும்; ஸ்கந்த புராணத்தில் இப்பூசைபற்றி சூதமுனிவர் கூறியுள்ளார், ஸ்கந்த சுவாமியின் இவ்விரதத்தைப்பற்றி சிவபிரானிடம் வினவிய போது சிவபிரான் அருளியதாவது;-

ஆதியில் 'சரஸ்வதி' நதிதீரத்தில் விமலம் என்றதோர் பட்டணம் இருந்தது. சந்ரப்பிரபன் என்றோர் அரசன் ஆண்டுவந்தான்: அவனுக்கு பட்ட மஹிஷிகள் இருவர். ஆனாலும் அரசன் மூத்த மனைவியிடம்தான் அதிக பட்சம் கொண்டிருந்தான்.

அரசன் வேட்டையாட வனத்திற்குப் போனபோது, நேரமானதால், களைப்புற்று தண்ணீர் உள்ள தடாகமொன்றிற்கு சென்ற போது. அங்கு அப்ஸரப் பெண்கள், ஓர் விரதத்தை அனுஷ்டித்து வந்தார்கள். இது என்ன விரதமென அவர்களை வினவியபோது, இதுதான் சுவர்ணகௌரீ விரதமென" பதில் தந்தார்கள். இந்த விரதம் ஆவணி மாத சுக்லபக்ஷத்து திருதியையன்று கௌரிதேவியை நினைந்து ஆற்ற வேண்டுமெனவும் கூறினார்கள். பதினாறு பூசைகள் செய்யும் முடிவில் கௌரியின் அருள் கிடைக்கும் என்றனர் (வரும்

## நல்லைக் குருமணியைப் போற்றிடுவோம்.

[ நல்லைத் திருஞானசம்பந்தர் ஆதீன முதலாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாததேசிக ஞானசம்பந்த பரமாசாரியசுவாமிகளின் நினைவு நாள் வருகிற 12 - 02 - 93 ஆகும். ]

திருஞான சம்பந்தர் ஆதீனம் அமைத்து
தெய்வீகத் திருநெறியை தரணியில் வளர்த்து
பெருஞானப் பொலிவாலே இறைபுகழ் எங்கணும்
பிரசங்க மூலம் பெரிதும் பரப்பி
குருவாக ஆன்மீகத் தலைவரென உயர்ந்தே
சிவப்பணி பலவும் சிறப்புறச் செய்த
அருந்தவ நாதனை அற்புதத் தொண்டனை
அன்புடன் நினைந்தே போற்றுதல் செய்வோம்-

— நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன்

## 'இறைஒளி' திறனலில் நிறைமொழி

### 'சிவகவிச் சுரபி' பட்டம் சூட்டினர் அருட்கவி

பேராசிரியர் கலாநிதி அ. சண் முகதாஸ்
பிரேரித்து வழங்க

நாவலர் 113ம் குருபூசை நிகழ்த்திய
சைவ பரிபாலன சபை ஆமோதித்தது
(கார்த்திகை மகம் ஆங்கிரச ஆண்டு)

### நாவலர் நயம் - இறை ஒளி வெண்பா

### யாவரும் விநம்பும் யாப்பு

யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர்
பேராசிரியர் அ. சண்முகதாஸ்

### வெளியீட்டுப் பேநுரை நிகழ்த்தினர்

நூற்றுக்குமேல் நாலாம் ஆண்டில் நிலவும் ஆற்றல்மிகு யாழ் சைவபரிபாலனசபை நிகழ்த்திய நாவலர் பெருமானின் நூற்றின்மேற் பதின்மூன்றும் குருபூசை விழா சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் ஆங்கிரச, கார்த்திகை 30ம் நாள் (மகம்) தலைவர் சிவ. இராஜேந்திரம் திருமுறை ஓதுதலுடன் தொடக்கி வைத்ததும் ஆராதனை நடந்தது.

வரவேற்புரை ஆற்றிய சைவப்புலவர் வ. கந்தசாமி அவர்கள் நாவலர் பெருமான் நடைமுறையை அடி ஒற்றி வளர்ந்துவரும் சைவபரிபாலனசபையார் ஐந்தாங்குரவரின் நூற்றின்மேற் பதினைந்தாங் குருபூசையை நிகழ்த்தவும் இப் பெரு நிகழ்ச்சியின்போது 'இந்துசாதனம்' ஆசிரியர் நம சிவப்பிரகாசப் பெரியார் 'நாவலர்நயம் – இறை ஒளி வெண்பா' நூல் அரங்கேற்றப்படுவதும், வண்ணை வைத்தீசன் திருவருளேயெனறுகூறி யாவரையும் அன்புடன் வரவேற்றனர்.

அதற்குமுன் திருமுறை மன்றத்தின் செல்விகள் பஞ்சபுராணம் பண்ணமைய ஓதிச் சிந்தனையை சிவன்பால் அமையச் செய்தனர்.

ஆசியுரை ஆற்றிய நல்லை ஆதீன இரண்டாவது குருமகா சந்நிதானம் சபையாரின் நீண்டகால நெறிமிக்க சமயப்பணியைப பாராட்டி இந்து சாதனத்தின இணையற்ற சேவையை வாழ்த்தி இறை ஒளியின திருஒளியாம் நாவலர் நயம் நூலை வெட்சினர்கள்.

---

## மாணிக்க மணிவாசகரு மார்கழி மாவிழா

### வாலாம்பிகை சமேத வைத்தீசன் திருக்கோயிலில்

"எங்கெழிலென் ஞாயி றெமக் கெங்கோன் இங்கிப் பரிசு நல்குதியேல்' என்று அன்று வாதவூரடிகள் குழைந்து சொன்ன மெய்ப்பொருள சொற்பெருக்கு வண்ணைதேவஸ்தானத்தில் மார்கழி 20, 21, 22ம் நாட்களில் மணிவாசகத்தை மணி மணியாக ஒலிக்க வைத்தது,

வண்ணை ஆதீன அறங்காவலர் தலைவர் சைவப்புலவர் வ. கந்தசாமி அவர்கள் தொடக்கிய நிகழ்ச்சி சைவப்புலவர் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் சிறப்புரையுடன் பல சைவ அறிஞர்கள் உரைகளுடன் சிறப்பாக அமைந்தது விழா.

"தானே வந்தெம்மைத் தலையளித்தாட் கொள்வான்" என்ற மணிவார்த்தை ஈழத்தமிழினத்துக்கு ஊக்கமளிக்கட்டும்.

பேதத்து நம்மை வளர்த்தெடுக்கும் சத்தியை விதந்து திறம்பாடி வழி காட்டிய மணிவாசகப்பெருமானை வாழ்த்தி வணங்கியது வண்ணை மாவிழா.

---

## வைத்தியர்கள் சேவைக்கென்றே பிறந்தவர்கள்

### கோப்பாய் அரசினர் மருத்துவ மனையில் சேவைநலம் பாராட்டும் கௌரவிப்பும்

"வைத்தியர்கள் சேவைக்கென்றே பிறந்தவர்கள், அவர்கள் கடமை, கனிவு என்ற பண்புகளுடன் செயலாற்றிறல் மக்களுக்குச் சிறந்த சேவையை வழங்க முடியும்; ஆங்கிலேய ஆட்சி அகன்றும் மேலைத்தேய மருத்துவ மோகம் இன்னும் எம்மை விட்டு அகலவில்லை; முனிவர்களாலும், இருடிகளாலும் திருவாய் மலர்ந்தருளப்பெற்ற சித்த மருத்துவ முறைகளைக் கையாண்டு சுகமாக வாழப் பழகிக்கொண்டாற்றான் நன்னிறைவு உள்ள சமூகமாகத் திகழ முடியும்" இவ்வாறு 'வைத்திய கலாநிதி' திருமதி தி. கோபாலரத்தினம் அவர்கள் சேவை நலம் பாராட்டு விழாவில் உரையாற்றும்போது குறிப்பிட்டார்கள்.

யாழ். கோப்பாய் அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றியிளைப்பாறிய வைத்தியகலாநிதி திருமதி தி, கோபாலரத்தினம், வைத்திய கலாநிதிகளாகிய திருவாளர்கள். மு. நியாகேசபிள்ளை, ம. போகவிநாயகம், திருமதி ல. போகவிநாயகம் ஆகியோருக்கு மேற்படி வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் வலி.கிழக்கு – தென்பகுதியிலுள்ள பொது அமைப்புக்களின் ஆதரவுடன் 20-12-92 ஞாயிற்றுக்கிழமை இவ்விழா நடைபெற்றது. குறித்த விழாவில் "வைத்திய ஜோதி" என்னும் பட்டமளிப்பும், பாராட்டுப் பத்திரமும், பணமுடிப்பும் கடந்த பத்து ஆண்டுகள் சேவை செய்த திருமதி தி. கோபாலரத்தினத்திற்கு வழங்கப்பெற்றது.

---

## போயா விடுமுறையிலும் ஓயாதுலாவும் போர் விமானம்

யுத்தம் என்றாற் புத்தி மயக்கமா? பஞ்சசீலம்தான் தஞ்சமென்று கொள்கையுடைய கொழும்பு அரசு புத்தமகானுக்குச் சித்தமான புனித நாளிலுமா வானத்தை ஊடுருவிப் பேரொலி ஆரவாரம் செய்து, பூசை பொலிந்து கொண்டிருக்கும் ஈழமண் மீது அங்கும் இங்குமாகப் பேயாட்டம் ஆடுவது.

அச்சுறுத்தி அபாயம் விளைவிக்கும் உபாயம் எச்சரிக்கை என்றாலும் எப்பயனும் பெறுதென்பதை படையினர் அறிவார்களாக.

---

## ஆலயதர்மகர்த்தாக்கள்கருத்தரங்கு

கோயில் தர்மகர்த்தாக்கள் கருத்தரங்கு நல்லை. ஞானசம்பந்தர் ஆதீனத்தில் எதிர்வரும் 17-01-93 காலை நிகழ ஒழுங்குகள் நடைபெறுகின்றன. இலங்கை இந்துப் பேரவையின் அழைப்பிற்கிணங்க இடம்பெறும் இக் கருத்தரங்கில் இந்துக் கோயிலைச் சிறப்பிக்க அரசியல் பிறமத ஊடுருவல் இல்லாமல் பக்திவழிப்படி தர்மகர்த்தாக்கள் வழிபடுவோர் பூசைசெய்யும் குருமார்கள் அனைவருடைய ஒத்துழைப்புடனும் நடாத்தப்பட ஆவன செய்ய வேண்டும் என்பதுபற்றிய பல அரிய கருத்துக்கள் ஆராயப்படவுள்ளன.

Hindu Organ

January 10 - 1 - 93

## Literator who reaped Laurels

When the movement for Independence mustered strong inspired by Mohandas Karmachand Gandei in Bharat, it was the Dravdian South-East that f u l l y responded to this patriotic call bubbling with earnest enthusiasm.

This breezy agitation, in its effervesceene, blew across the waters st rring the imagination of the educated youth in EELAM, the North-East of Lanka.

The urge was defenitely spontaneous: it was not a soda-water bottle effervesene nor was it merely in sympathy with Bharat.

Among these who become thus enraptured in EELAM were those Senior students who had just entered the noble profession of Teaching.

Muttukumara, fondly called M. A. Master, Handy Perinpanayaham, A. E. Tamlier and a few other, were in the fore-front of the sudden awakening.

Namasivayagam Sabaratnam and R. N. Sivapirkasam, though not in the van-guard. were at the rear. They both be ame Journalists of the Gandhian mould.

Saba, sober minded and studious came under the direct supervision of Saiva Perivary, Shivapathasundaram at the Victoria College which educational Institution had shot into prominence by its orthodox approach to learning.


Saiva Periyar was the symbol of classic pedagogy.

When Saba eventually earned the are distinction of Principalship of the premier educational institution - Jaffna Hindu Callege, he was distinquished as second Sivapatham and the national institution grew in glory.

Retiring in due course, Saba, caught the vigilant eye of erudite K, C. Thangarajah, administrative authority of EELANADU, As editor of this reputed provincial Daily, Saba not m e r e l y maintained its magnificent standre but also emulated the exellent exmple of versatile Saran Iyer of unfogettable memory,

Saba has been c a l l e d to the bar of apititual attainment,

His life in this world had b e e n lofty, landen with laurels all along.



## சைவம் வளர்த்த சேவையாளர்

★

உடுவில் முத்து சின்னத்துரை தம்பதிகளின் புத்திரியா திருமதி சரோஜினி கல்யாண சுந்தரரேசன் M. A. அவர்கள் அண்மையில் இளைப்பாறியுள்ளார்.

இவர் இராமநாதன் கல்லூரி விஞ்ஞான ஆசிரியராகவும் மானிப்பாய் மகளிர் கல்லூரியினதும் அதிபராக கல்வி அதிகாரியாய் சிறப்பாக சேவை செய்தது மட்டுமல்லால் கல்விப் பொதுத் தராதர உயர்தர சாதாரண பரீட்சையின் பிரதம பரீட்சை அதிகாரியாகவும் கடமையாற்றிய அனுபவம் உள்ளவர் சைவமும் தமிழும வளர்க்க அருந்தொண்டாற்றிய அவர் இந்து சாதன Hindu Organ பத்திரிகையின் அபிமானியாகவும் இருந்து அதன் விநியோகத்திற்கு பெரும் ஆதரவு தந்துள்ளார். இத்தகைய சேவை செய்த அவர் கல்விச் சபையின் தலைவரும் ஆசிரியர் சங்கச் செயலாளருமான புங்குடுதீவை பிறப்பிடமான திரு. ஆறுமுக கல்யாண சுந்தரரேசன் அவர்களின் பாரியார் என்பது ஆச்சரியப்பட வேண்டிய விடயமல்லவே.

## பழம்பதியில் ஒரு புதுப்பொலிவு

*திருவிளக்குப் பூசை மாவைக் குரு வகுத்தனர்*

கார்த்திகைப் பூரணை, உரோகிணி உத்தம நாள். தீபம் எங்கும் ஆர்த்தெழும் சீர் பெருகும் வேளை.

கன்னியர் ஒன்பதின்மர் முன்னவன் கோயில் முன்றிலில் தன்னை ஒவ்வொருவரும் மறந்து தீபாராதனை செய்ய வரிசையாக வீற்றிருக்க மாவை ஆதீன கர்த்தா மகாராஜ ஸ்ரீ து. ஷண்முகநாதக் குருக்கள் வழிநடத்த மாலை நான்கு மணிக்காரம்பமான மகத்தான வைபவம் அமைதியும் ஆர்வமும் ஆயெழ இமைகொட்டாதெல்லோரும் உற்று நோக்கிய வண்ணம் பழம் பிள்ளையார் பாற்பற்று மட்டுமே விளங்க நிகழ்ந்த திருவிளக்குப் பூசை பழம்பதிக்குப் புது வழக்கமாக வளர்ச்சி வளக்கமாக நிகழ்ந்தது.

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையாரால் யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 450ம் இலக்கத்திலுள்ள சபையாரது சைவப்பிரகாச அச்சகத்தில் (10-01-1993)ல் வெளியிடப்பெற்றது. ஆசிரியர் : நம. சிவப்பிரகாசம்